# புதுக்கவிதைப்பூக்கள்



கவிஞர் வாகரைவாணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்கவிதைப் புத்தகம்

கவிஞர் வாகரை வாணன்
ஒய்வு பெற்ற ஆசிரியர்
புனித – பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்
இலங்கை.

வெளியீடு

வள்ளல் பேதுருப்பிள்ளை உடையார்
நினைவகம்
வாகரை
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : 10 - 02 - 1998

உரிமை : செல்வி. கோமகள் அரியரத்தினம்
(வாகரைவாணன்)

வெளியீடு : 19.

விலை ரூபா : 75/-

அச்சுப்பதிப்பு : ஜெஸ்கொம் பிறின்ரர்ஸ்
இல. 1, யேசுசபை வீதி
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகரை - பனிச்சங்கேணி
கிராமங்களின் அதிகாரியும்
(Village Headman)

மட்டக்களப்பு மாவட்டத்தின்
வடமோடி நாட்டுக்கூத்து
ஆசிரியர்களில் ஒருவரும்

என்
அன்புத் தந்தையாருமான
திருமிகு
பேதுருப்பிள்ளை உடையார் சந்தியாப்பிள்ளை விதானையார்
அவர்கள்

அமரத்துவம் அடைந்து
இருபதாண்டுகள் (1979 - 1999) நிறைவுஎய்துவதன்
நினைவாக
இந் நூல் வெளியிடப்படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்தந்தை. போல் சற்குணநாயகம், யே.ச

அவர்களின்

ஆதரவுதான்

இந் நூலின்

தோற்றத்திற்கு

ஆதாரம்

நல்ல அந்த உள்ளத்திற்கு

எனது நன்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பனோடு கவிதை காட்டுக்குப் போய்விட்டதா?

கம்பன் புகழ் பாடிக் கன்னித்தமிழ் வளர்க்கிறோம் என்று கூறும் ஒரு கட்சியினர் கம்பனோடு கவிதை காட்டுக் குப் போய் விட்டதே என்று அழுது கண்ணீர் வடிக்கும் காட்சி ஆண்டுக்கொரு தடவையாவது அரங்கேறவே செய்கின்றது.

இப்படிக் கண்ணீர் ததும்பக் காட்சியளிப்பவரைக் காணும் வாய்ப்புப் பெற்ற இன்னுமொரு பகுதியினர் அவர்க ளுக்கு ஆறுதல் கூறுவது போல, இல்லை .. இல்லை .. பாரதி யோடுதான் கவிதை பாடை ஏறிவிட்டது என்று கூறிப் பச் சாத்தாபப்படுவதையும் பார்க்கின்றோம்.

இந்த இலக்கிய சிகாமணிகள் சொல்வதையெல்லாம் கேட்கும் போது நமக்கு சைவசித்தாந்தம் என்னும் சொற் றொடருக்குக் கொடுக்கப்படும் விளக்கமே நினைவுக்கு வரு கின்றது. சிந்தாந்தம் என்றால் சிந்தனையின் முடிவு, முடிந்த முடிவு என்பதுதான் அந்த விளக்கம்.

உலகத்தில் உள்ள அனைத்தும் பரிணாமத்திற்கு உட் பட்டவை. மனித சிந்தனை எதுவும் பறுபரிசீலனை செய் யத்தக்கவை என்பதை நம் அறிவோம். ஆனால் குறிப் பிட்ட சில கருத்துக் கோவையை மட்டும் முடிந்த முடிவாகச் சிலர் அங்கீகரிப்பதுதான் நமக்குப் புரியவேயில்லை. அக் கருத்துக்களுக்குப் பரிணாமத்தில் இருந்து விதி விலக்களிக்கப் பட்டிருக்கின்றதா, என்ன?

கம்பனோடு கவிதை சுடுகாட்டுக்குப் போய்விட்டது என்று கதை அளப்பாரும் - இல்லை, இல்லை பாரதியோடு தான் அது ஒரேயடியாகப் படுத்து விட்டது என்று பதறித் துடிப்போரும் நம்மைப் பொறுத்தவரையில் சித்தாந்தவாதி களாகவே தென்படுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் மட்டுமல்ல, தமிழ் இலக்கியத்தைக் கூறுபோட நினைக்கும் ஒரு சிறு கூட்டத்தினர் 'முற்போக்கு' என்ற வட்டத்திற்குள் அத்தனை முடக்கி இயல்ாவ அதன் வளர்ச்சிக்கு இடையூறு விளைவிப்பதையும் பார்க்கின்றோம்.

எனவே தான், இலக்கியகாரர் என்று சொல்லப்படுகின்ற அனைவருக்கும் பொதுவாகவே சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம்.

கம்பனையே ஒரு கை பார்க்கக் கூடிய கவிச்சக்கரவர்த்திகள் - பாரதியை ஒரு பக்கம் தள்ளி விடக் கூடிய கவியரசர்கள் இன்றும் நம் மத்தியில் இருக்கவே இருக்கின்றார்கள். ஆனால் காலம் தான் அவர்களை அடையாளம்கண்டு கொள்ளவில்லை. காலம் அவர்களைக் கண்டு கொள்ளும் போது 11ம் நூற்றாண்டுக் கம்பனும், 19ம் நூற்றாண்டு பாரதியும் இருந்த இடம் தெரியாமல் போய் விடுவார்கள்.

இருக்கும் போதே மேதைகளை இருட்டடிப்புச் செய்து பழக்கப்பட்ட 'கால'த்திற்கும் அந்தக் 'கால'த்தை அரசியல் வித்தைகளால் தமது கைக்குள் வைத்திருக்கும் ஒரு சில குழுவினருக்கும் இப்படியொரு கருணை அவர்கள் மீது பிறக்குமா என்பது கேள்வியே!

இது எனது நாலாவது புதுக்கவிதைப் புத்தகம் இதில் இருக்கும் ஐவரும் எங்கள் வணக்கத்துக்குரியவர்கள். மதமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்ட மகான்கள்' ஆயுதயுகத்தில் அல்லல்படும் நமக்கு அவசரமாகத் தேவைப்படுபவர்கள்.

இளைஞர்கள் இனியாவது இவர்கள் பக்கம் திரும்பட்டும். இந்த உலகம் உருப்பட இது தான் ஒரேவழி!

கலைவாசம், அன்புடன்
479 3, புதிய கல்முனை வீதி, வாகரை வாணன்
நாவற்குடா,
மட்டக்களப்பு.
10. 02. 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போதி மரத்துப் புத்தர்

இமயமலை
இந்துக்களின்
கைலாசம்

புனித கங்கை
இங்கிருந்து தான்
பொங்கி வழிகிறது

கங்கையில்
நீராடும் தேசம்
கபில வஸ்து

இது
இயற்கையின்
உலகம்
இளமையின்
கொலு மண்டபம்

அழகு
வீற்றிருக்கும்
ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பனிப்பால் வடிக்கும்
பர்வதங்கள்
பவளங்கள் சொரியும்
பச்சிளங் கொடிகள்

முறுவல் செய்ய
சகுனம் பார்க்கும்
மொட்டுக்கள்

தொங்கும்
கொடித் தொட்டிலை
தொட்டு ஆட்டும்
காற்று......... அதில்

துயில் கொள்ளும்
மலர்க் குழந்தைகள்

பூக்கள் தான்
இந்த மண்ணின்
புத்திரிகள்

காலையில் எழுந்து
கருவண்டுகள்
பூ எனும்
நாதஸ்வரத்தில்
பூபாளம் பாடும்

மலைக் காற்று
இந்த நாட்டின்
மாமருந்து

இதனால் இங்கே
இறப்பே இல்லை

சாரல் அதன்
சந்தோஷம்

குளிர்ச்சியில் நிலம்
கூத்தாடும்

பகலவன் முகத்தைப்
பார்த்தால் போதும்
பரவசத்தால்
பனி மலைகள் உருகி
ஆறாகப் பாயும்

மரங்கள்
அம் மண்ணின்
வரங்கள்

பழக் குலைகள்
அதன்
பரிசுகள்

பறவைகளுக்கு
அதுவே
பரலோகம்

நிலம்
நிழலாடை
போர்க்கும்

பசு மாடுகளுக்கு
அது
பஞ்சு மெத்தை

மழைக்கும்
அந்த மண்ணுக்கும்
தினமும்
மணி விழாவே

மகுடம் சூடிய
மலைகள் அதன்
மாகோன்னதங்கள்
அவை
மேகங்கள் தங்கும்
மேல் வீடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயில்களும் கிளிகளும்
கூடும் இடமே
அந்தத் தேசத்தின்
கலைக் கூடம்

அழகு மயில்களே
ஆஸ்தான
நர்த்தகிகள்

கபிலவஸ்து
ஒரு
காந்தக் கட்டி

இறைவனைக் கூட
அது
இழுத்துக் கொள்ளும்

சாக்கியர்
சத்திரியர்கள்

வீரம்
தோளிலும் மார்பிலும்
வீற்றிருக்கும்

நெற்றியில்
வெற்றி
நின்று துலங்கும்

ஆரியர் இவர்
சூரிய வம்சம்

கோசலத்திலும்
சாக்கியர்
கொடி
பறந்தது

சுத்தோதனன்
கபிலவஸ்துவின்
சுதந்திர மன்னன்

நாட்டின் தலைவன்
மன்னனே ஆயினும்
நடந்தது
மக்கள் ஆட்சியே

தனி நாயகத்தை
விரும்பாத
சன நாயகம்
அந்த மண்ணின்
தனிப்பலம்

சுதந்திரக் காற்று
இதனால்
அந்த மண்ணின்
மூலை முடுக்கெல்லாம்
சுற்றுலாப் போகும்

சுத்தோதனன்
மனைவி
ஒரு சுந்தரி

தேவதா என்ற
ஊரின் தேவதை

மகா மாயா
அவளின்
மங்கல நாமம்

வாழ்க்கை
அவளுக்கு
வசந்தம்

புயல்
அந்தப் பக்கம்
போனதேயில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்திக்கும்
திருமண வாழ்வு
தேவியின் வயிற்றில்
முத்தொன்றைப்
பரிசாக
முன் வைத்தது

அரசன்
மகிழ்ச்சியில்
மூழ்கிப் போனான்

மகப் பேற்றுக்காக
மாயா
தேவதா ஊருக்குத்
தேரேறினாள்

முன்னும் பின்னும்
படைகள் மொய்க்க
அன்னம் ஆரோகணித்தாள்

நடுவழியில்
ஒரு
நந்தவனம்

படைகள் தரித்தன
பாவை
களைத்துப் போனதால்

உள்ளத்தை
உசுப்பி விடும்
உலும்பினி வனம் அது
உடல் சோர்ந்த
மாயா அங்கே
ஓய்வெடுத்தாள்

செய்தி அறிந்த
தென்றல் அவளைத்
தேடி வந்தது

மலர்கள்
நறுமணத்தை
அள்ளி வீசின
மயில்களும் குயில்களும்
மருவி நின்றன
மாயா
மயங்கிப் போனாள்

வைகாசி
நிலவுப் பெண்
அன்று வானில்
கை வீசி வந்தாள்
உலும்பினி
தேவர்
உலகமானது

ஓய்ந்திருந்த
மாயாவின்
உடலினுள்
வேதனை
உட் பிரவேசித்தது
சாய்ந்தாள்
சரிந்தாள்
மகவு ஒன்று
மலர்ச் சோலையில்
முகம் காட்டியது
முழு நிலவாக

என்னைப் போல்
இன்னு மொன்றா
வெண்ணிலா
வெட்கித்
தலை குனிந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமி எங்கும்
பூரிப்பு
வானலோகத்திலும்
மகிழ்ச்சி வெள்ளம்
வார்த்தோடியது
ஞானி அசிதர்
நடப்பதைக் கண்டு
என்ன காரணம்
என்றார்
இமையோரிடம்

புவனத்தில்
அவதரித்தார்
போதிசத்துவர்
கவனத்தில் கொள்க
கழறிடுவர் தேவர்

மனிதரில் அவர்
மகாத்மா
தர்மமே அவரின்
வேதம் அது
தழைத்திட
உலகத்தின்
காதுகளில்
உபதேசிப்பார்

உண்மை அறிந்த
அசிதர்
ஓடிச் சென்றார்
மன்னன் மனையில்
மாதவனைக் கண்டார்

பார்த்ததுமே
பரவசத்தால்
மூத்தவர்
முன்னுரைத்தார்

அங்க இலட்சணம்
அத்தனையும்
தங்கம் இவனிடம்
தாமாய்ச் சேர்ந்தன

மாபெரும் செயலை
மண்ணிற் புரிவார்
நாமம் சித்தார்த்தர்
நவின்றார் யோகி

கபிலவஸ்து
கைலாயமானது
மகிழ்ச்சிக் கங்கை
மனங்களில்
பெருக்கெடுத்தது

சித்தார்த்தன் பிறந்து
ஏழு நாளில்
சுத்தோதனனுக்குப்
பெரும் சோதனை

தென்றல்
திரும்பிச் சென்றது
புயல் அங்கே
முதன் முறையாய்ப்
புகுந்து கொண்டது
மாயா மரணமானாள்
காயம் கட்டையானது

சுத்தோதனன்
அரண்மனையில்
சோதிடர்கள்
சத்திய வார்த்தை
பூர்வமும் கேட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர்களில்
வாலிபன் ஒருவன்
சுந்தனா அவன்
குறித்துச் சொன்னான்

விருத்தாப்பியரை
வியாதிக்காரரை
உறுத்தும் சவ
ஊர்வலத்தை
ஒரு நாள் கண்டால்
சித்தார்த்தன்
உலகையே
துறப்பான்
மண்ணுலகம்
புதிய மறையைக் காணும்

சுந்தனா
வார்த்தை
அரசன் மனத்தைக்
குத்தியது

விந்தை முடிவு
அவனுள்
வேரூன்றியது

மதில் சூழ்ந்த
மாளிகைகள்
புதியன மூன்று
பூமியில் முளைத்தன

முற்றமெல்லாம்
மொட்டும் பூவுமாக
சுற்றி வர மலர்ச்சோலைகள்

சுகந்தம்
கபிலவஸ்தை
சொர்க்க மாக்கியது

அரண்மனையில்
சித்தார்த்தன்
அஞ்ஞாதவாசம்
செய்தான்

ஒரு நாள்
ஓய்வுக்காக
அரச மரத்தடியில்
அவன் உட்கார்ந்தான்

சிந்தனை அவனைச்
சிறைப்பிடித்தது
இந்த உலகில்
அவன்
இருக்கவே இல்லை

பார்த்த
பணியாளருக்கு
வேர்த்தது
வேந்தனிடம் ஓடி
விளைவைச் சொன்னார்
அவன்
விதியோ என
வெதும்பினான்

இன்னுமொரு நாள்
இது போல்
பூங்காவில் இருந்தான்
அப்போது
அன்னம் ஒன்று
வந்து வீழ்ந்தது
அவன் மடியில்
என்ன இது
என்று திகைத்தபடி
அதைத் தூக்கிப்
பார்த்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்த அம்பில்
இருந்து
இரத்தம் வழிந்தது
அப்படியே அதை
ஆரத் தழுவினான்

மணம் செய்தால்
மனம் மாறும்
சுத்தோதனன்
தனக்குள்
சொல்லிக் கொண்டான்

கண்
இமைப்பதற்குள்
காரியங்கள்
கடுகதியாயின
பெண்ணின் பெயர்
யசோதரா

கண்கள் இரண்டும்
கதைக்கும்
புன்னகை ஒன்றே
போதும்
பூலோகம் சொக்கிப்
போகும்

கபிலவஸ்து
கல்யாண மாலை
அணிந்து கொண்டது

தேசம் எங்கும்
திருமண வாசம்

வாசம்
சித்தார்த்தனையும்
வசமாக்கியது

சின்ன வயதில்
சித்தார்த்தனுக்குத்
திருமணம்

அன்னம் யசோதரா
அழகு மயில்
மன்னர் குல
மாதரசி

இமையும் விழியும் போல
இருவரும்
சமலயது
வாழ்க்கை
சர்க்கரைப் பொங்கல்

ஒவ்வொரு கணமும்
இன்பம்
ஊற்றெடுத்தது
அவ்விருவரும்
அமரர்களே

இருவருக்கும் இப்போது
இருபத்தொன்பது வயது
ஒரு குழந்தை
உதயமானான்

இராகுலன்
அவன் பெயர்

சேய் பிறந்த பிறகு தான்
சித்தார்த்தனுக்குத்
தன் நாட்டைத்
தரிசிக்கும்
தாகம் எடுத்தது

சுத்தோதனனுக்கு
இதுவும் ஒரு
சோதனையே
பத்திரம் என்றான்
பாகனிடம்

தேரோட்டி
சித்தார்த்தனுக்கு
ஊர் காட்டி
உலா நடத்தினான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைப் பறவை
வெளியில்
சிறகடித்தது

முற்றிலும் புதிய
சூழ்நிலை

சித்தார்த்தனின்
முகம் பேசியது

காட்சிகள் ஆயிரம்
கண் சிமிட்டின

சித்தார்த்தன்
உடல்
சிலிர்த்தது

வீதியில் தேர்
விரைந்தது
பாதி வழியில் ஒரு
கிழவன்
பஞ்சுத் தலையோடு

கிழவனைக் கண்டதும்
சித்தார்த்தன் மனதில்
கேள்விகள்

உள்ளம் குழம்பியது
உண்மை இது தானா?

சந்தகனுக்குச்
சரீரம் நடுங்கியது

காட்சி இது
சித்தார்த்தன்
காணலாமா?

தேர் இப்போது
வேறு திசையில்...
அங்கே...

வீதியில் ஒரு
வியாதிக்காரன்
சித்தார்த்தனுக்கு
நல்ல
சித்திரவதை

இன்னுமொரு
சாலையில்
தேர் இறங்கியது
சவ ஊர்வலத்தோடு
சனங்கள்
சித்தார்த்தன் கண்கள்
சந்தித்தன

சில்லென்றது
அவன் உடல்
சொல் எழவில்லை
இது என்ன சோதனை?

சந்தகன்
நினைத்தான்
இது என்ன சதியா?

சிந்தனைக் குகைக்குள்
சித்தார்த்தன்
விந்தை நிகழ்வுகள்
விழித் திரையில்

மூப்பு பிணி
முடிவு சாவு
இந்த மூன்றும்
சேர்ந்தது தான்
வாழ்வா?

மண்ணாவது தான்
மனித வாழ்வென்றால்
பொன் பொருள்
பூமியில் ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்ப நேர
வாழ்க்கை
சொர்க்கமா?
எல்லாம் பொய்
என்றான பின்
கல் எழுத்தாக
வாழ்க்கையைக்
கணக்கெடுப்பதா?

அரண்மனையைத்
தேர்
வந்தடைந்தது
அரசன் மகனை
அமைதி
ஆட்கொண்டது

கபிலவஸ்துவில்
சித்தார்த்தனின்
கடைசி
இரவு அது

மாளிகை
நித்திரையில்
மயங்கிக் கிடந்தது

மகனும் தாயும்
மஞ்சத்தில்
நகமும் சதையும் போல

எட்டிப் பார்த்தான்
சித்தார்த்தன்
இதயம் கசிய முன்
வெட்டி விட்டு
உறவை
வெளியேறினான்

கொற்றத்தைத்
துறந்த
இளவரசனுக்குக்
குளிர் நிலா
குடை பிடித்தது

வெள்ளிப் பூக்கள்
வீதியை
அலங்கரித்தன

காண்டகா
வாயிலில்
காத்து நின்றது

புரவி அதில் ஏறி
அவன்
அமர்ந்ததும்
அது புயலாகியது

பின்னால்
சந்தகன்
கண்ணின் இமை போல

நாடு கடந்து
காடு வந்து
சேர்ந்தது காண்டகா

இளவரசன்
இறங்குகின்றான்
ஓர்
ஏழையாக

ஆடை அணிகள்
சந்தகனுக்கு
அர்ப்பணமாகின்றன

மயிர்
மழிக்கப்படுகிறது

காவி உடையை
கைகள்
ஏந்துகின்றன

காட்டை நோக்கிக்
கால்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் வடித்த
காண்டகா
அந்த இடத்திலேயே
கண்ணை
மூடுகிறது

சந்தகனின் உள்ளம்
சல்லடையாக்கப்படுகிறது

அவன் குதிரை
அரண்மனை நோக்கி
அசைகிறது

காடுகளை அளந்த
சித்தார்த்தன்
கால்கள்
கடைசியாக
மகத நாட்டின்
மண்ணை
மிதிக்கின்றன

அனுப்பியா
அந்தத் தேசத்தின்
ஓர் அங்கம்

முற்றும் துறந்த
சந்நியாசிகள்
அந்த மண்ணை
முற்றுகையிட்டனர்

பிராமணரின்
போக்கு
பிடிக்காத
சித்தார்த்தனுக்கு
இந்தச்
சந்நியாசிகளின்
வழியே
சரியெனப்பட்டது

வேதங்களும்
சடங்குகளும்
வீண்

வேள்விகளால்
எந்த விளையும்
தீராது

பிராமணர்களே
இவற்றைப்
பிரசவித்தவர்கள்

வைதீகம்
அவர்களையே
வாழ்விக்கும்

உயிர்களெல்லாம்
ஒன்று

பலியிடுதல்
மகாபாவம்

சித்தார்த்தன்
இப்படிச்
சிந்தித்தான்

தன்னை வருத்தும்
சந்நியாசிகளை
முன் மாதிரியாக்கி
ஒரு முழு துறவியானான்

துறவி
சித்தார்த்தனுக்கு
தொண்டர்கள் ஐவர்

குந்தனா
அந்தக் குழுவில்
ஒருவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தோதனனிடம்
சித்தார்த்தன்
பற்றி
சோதிடம்
சொன்னவன் இவனே

நீர் கூட அருந்தாத
நிர்க்கிருந்தா
சித்தார்த்தன்
ஊர் ஊராய்
அலைந்தான்
உபவாசமே வாழ்க்கை

ஆறு ஆண்டுகள்
இப்படி
ஆயினும்
அடைந்தது
எதுவுமில்லை
அதனால்
தன்னை
ஒறுப்பதைத்
தளர்த்திய
சித்தார்த்தன்
மாற்று வழியில்
மனத்தை ஓட்டினான்

ஒளியைக்
கண்டடைய
உடல் ஒரு கருவி
அதை
ஓம்புதல் வேண்டும்

முடிவு எடுத்தான்
சித்தார்த்தன்
விடிவை நோக்கி
அவன் மனம்
விரைந்தது

உர்விலாவில்
எப்போதும்
அழகின்
ஊர்வலமே

இது
பூ மரங்கள் பொலியும்
மாநகரம்

மலர் அர்ச்சனை
செய்வது தான்
அங்கு
மதங்களின்
மதக் கடமை

நிரஞ்சனா நதி
அந்தப் பூமியின்
நிரந்தரச் செல்வம்

அனைத்திலும்
அமைதியின்
ஆக்கிரமிப்பே

அருமையான இடம்
சித்தார்த்தன் மனம்
ஆமோதித்தது

நகரத்தின்
நால் வித மரங்களில்
சால் மரமும் ஒன்று
அது சந்தனமாகக்
கமழ்ந்தது

சாது சித்தார்த்தன்
அதனடியில்
போய்ச் சாய்ந்தான்
குழைகள்
சாமரை வீசின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையைக்
காணும் வரை
இந்த
மரத்தடியிலே
உட்கார்ந்திருப்பேன்
சித்தார்த்தன் மனம்
செபித்தது

புத்தனாக விரும்பிய
சித்தார்த்தன்
பசும் புற்களின் மீது
பத்மாசனமிட்டு
புலன்களை
எதிர்த்து
ஒரு பெரும்
போரையே
தொடங்கினான்

சத்தமின்றி
யுத்தம் நடந்தது
சலனங்களும்
சபலங்களும்
சரணடைந்தன

தியான நெருப்பு
மன அழுக்கைத்
தீய்த்தது

ஒளி
உள்ளத்திலிருந்தே
ஓடி வந்தது

தங்கமாக முகம்
தகதகத்தது

நிட்டையிலேயே
அவர் மனம்
நிலைத்தது

பாவி மாரா
இதனைப் பார்த்தான்

கோவித் தெழுந்தான்
மனம் கொதித்தது

காற்றும் மழையும்
களத்தில் இறங்கின

இடியும் மின்னலும்
அந்த இரவை
ஒரு பிடி
பிடித்தன

சித்தார்த்தனிடமா
இந்தச் சிலுசிலுப்பு?

தீராச் சினம்
மாராவைத் தின்றது

அக்கினிக்கு
ஆணையிட்டான்
அது
பக்கம் வந்து
பணிந்து நின்றது

சுற்றி வளைத்து
இந்தச்
சூனியக் காரனைச்
சுட்டெரி

சொற் கேட்ட
சுடு நெருப்பு
பற்றி எரிந்தது

ஆனால்
சித்தார்த்தன்
பத்திரமாகவே
இருந்தான்

முயற்சிகள் எல்லாம்
முழுத் தோல்வி
ஆயினும் மாரா
அயர்ச்சி
அடையவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரம்பையர்
மூவர்
அரங்கேறினர்
சுரங்கா
சித்தார்த்தன்?
குன்று
குலையவேயில்லை!

ஆசை வார்த்தைகளை
மாரா அள்ளி
இறைத்தான்
பாச வலையைப்
பலமாகப் பின்னினான்

சித்தார்த்தன்
சிலையாகவே
இருந்தான்
தோல்வி மாராவைத்
துரத்தியடித்தது

அன்றிரவு
ஓர் அதிசயம்

இரண்டு நிலவுகள்
ஏக காலத்தில்

வெளி இருளை
விரட்ட
விண்ணில் ஒன்று
உள் இருளை
ஓட்ட
உலகில் ஒன்று
பூமிக்கும் வானுக்கும்
பூரிப்பு

சால் மரத்துச்
சந்நியாசி
இப்போது
சர்வமும் உணர்ந்த
புத்தர்

சால் மரத்துக்குச்
சரித்திரம்
போதி மரம் என்ற
புதுப் பெயர் தந்தது

பூரணனான
புத்தர்
வாரணாசிக்கு
வருகை தந்தார்
வழியெல்லாம்
ஞான ஒளி மழை

பழைய நண்பர்கள்
அங்கே
வளைய இருந்தனர்
புத்தர் போதித்தார்
அவர்கள் மனம்
புனிதமானது.
தொண்டர்களாக
ஐவரும்
தொழுது நடந்தனர்

கண்ட
இடமெல்லாம்
அருட்காட்சி
தெண்டனிட்டது
தேசம்

சுட்டெரிக்கும்
வெயில்
ஒரு நாள்
அந்த ஊரைச்
சூழ்ந்து விட்ட வேளை
வீதியில் வந்த
புத்தர்
களைப்பினால்
வீழ்ந்து விட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியில் கிடந்த
பொக்கிஷத்தை
பையன் ஒருவன்
பார்க்கிறான்

மகான் இவர்...
அவன் மனம்
சொல்கிறது
தொடக் கூடாது நான்
தோஷம்...

உள்ளத்துக்கு
உத்தரவிட்ட அவன்
ஓடிச் சென்றான்
கொப்பு குழைகள்
குடையாயின்
அப்புறம்
அவன் யோசித்தான்

நிழலின் குளிர்ச்சி
புத்தரின் இமையைத்
திறந்தது

ஐயா என்றான் அவன்
கைகள் குவிய

சவமெரிக்கும்
சாதி நான்...
தபஸி தாங்கள்
தண்ணீர் தரலாமா?

தம்பி...
நானும் நீயும்
மனிதன்
ஊனும் ரத்தமும்
ஒன்று
வேற்றுமை எந்த
விதத்தில் வந்தது?

உயர்வும் தாழ்வும்
உள்ளத்தினால் தான்

பெரிய மனம்
உனக்கு
அதனால் நீயும்
பிராமணன் தான்

பிறப்பினால் யாரும்
பெரியவன் ஆவதில்லை
சிறப்பு
நல்ல செய்கையால் தான்

தண்ணீர் தா
அமுதம் எனக்கது

பறந்து சென்றான்
பையன்
கறந்த பால்
கையில் வந்தது
அருந்திய புத்தர்
அவனை
ஆசீர்வதித்தார்

மகதம்
மலைகளின் தேசம்
மழை முகில்கள்
விளையாடும்
மைதானம்

மரம் சூடும் மலர்கள்
மண் சூடும்

நறுமணத்தில்
தேசம் நனையும்

காற்று
செடி கொடிகளைக்
கட்டித் தழுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளங்களில்
பூக்கள் குளிக்கும்

அழகு
அரசாளும்
தேசம் அது

பிம்பசாரன்
மகதத்தின் பேரரசன்

ஆனால்...
கோல்
எப்போதும்
குடிகளிடமே

ஜனநாயகம்
அங்கு தான்
ஜனனமெடுத்தது

பூரண சுதந்திரம்
எல்லோருக்கும்
பொதுவுடைமை
மன்னனும்
மக்களில் ஒருவனே

சின்னவன் பெரியவன்
சிந்தனை இல்லை

பிம்பசாரன்
வீரத்தின் பிம்பம்

சக்தியின்
இருப்பிடம்
அவன் சரீரமே

பிராமணியம்
அங்கு
பிரயல்யம்

வேத மந்திரங்களே
அந்தத் தேசத்தின்
கீதம்

வேள்விக்காகவே
அங்கு
வெள்ளாடுகள்

புத்தரின் வருகை
அரசனின்
புலனுக்கு எட்டியது

உத்தரவிட்டான்
நாடே
உற்சவமாகட்டும்

சொர்க்கமாகத்
தேசம்
சோடிக்கப்பட்டது

திக்குகளெல்லாம்
அலங்காரங்கள்
கண்களைத்
தின்றன

வீதிகளெல்லாம்
மலர் விரிப்புக்கள்

போதி மாதவனுக்குப்
புஷ்பாஞ்சலி

எழுந்தருளிய புத்தரை
இயற்கையே
வரவேற்றது

தோரணங்களாக
அருவிகள்
தொங்கின

வாரணங்களாகக்
குன்றுகள்
வாசலில் நின்று
வரவேற்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதவனின் வருகை
ஆதவனையே
அஸ்தமிக்கச்
செய்தது

புத்தரே உண்மை
நான் போலி
என்று சொல்லிய அது
பொய்யாய்ப்
போனது

வழியில்
வரும் போது
புத்தரின்
விழியை
அள்ளின
வெள்ளாடுகள்
அவற்றில்...

காலொடிந்த
ஆடொன்று
கருணை வள்ளலின்
கைகள் அதைக்
கட்டி அணைத்துக் கொண்டன
கண்ணீர்
கடலாகப் பெருகியது

யாகத்துக்காக
அவை நடத்தும்
யாத்திரை
புத்தரின்
மனத்தில்
சோகத்தை
எழுப்பியது

ஊராள்வோனிடம் அவர்
உரத்துச் சொன்னார்

வேண்டாம் இந்த
விளையாட்டு
மூண்டெழும் தீயில்

உயிர்கள்
மூழ்வதா?

தேவர்க்கு
உயிர்ப்பலி
தேவை தானா?

இரத்தத்தை
இச்சிப்பவன்
இறைவனா?

காவலன் நீ
உயிரைக்
காக்க வேண்டும்
சாவதற்கு
வழி காட்டின்
உலகமே
சபிக்கும்

சமயச் சடங்குகள்
சாதித்த தென்ன
எமையே நாம்
ஏய்க்கின்றோம்

முடிவு கட்டு
இந்த
முட்டாள் தனத்துக்கு
விடிவு கிடைக்கட்டும்
வெள்ளாடுகளுக்கு

சினத்தால்
புத்தரின் முகம்
சிவந்தது
மனத்தால்
தூயவனின்
மலர்ப் பாதத்தில்
மன்னன் வீழ்ந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணத்தால் உயர்ந்தவனே
குன்றமே
எனனைக்
கை தூக்கி விடு
அவன்
கண்ணீர் விட்டான்

புத்தர்
போதித்தார்
அவன்
சுத்தமடைந்தான்
ஆத்ம சுகம்
கிடைத்தது

வேணு வனத்தை
வேந்தன்
புத்தருக்கு
தானமாகத் தந்தான்
தரும சக்கரம்
சுழன்றது ..

மணவாசம்
செய்யும் புத்தர்
வேறு
வனவாசம் செய்வார்
அங்கு
இனவாசம் ஏது
பூ
இதழ்வாசம் தான்
எங்கும்

விளக்கவர்
வனத்தில்
வீற்றிருந்து
அழுக்கைத் தீர்ப்பார்
அருள் பொழிவார்

மாதவனை
மக்களெல்லாம்
ஆதவனென்றே
அடி பணிவர்

ஒருநாள் ஒருத்தி
ஓடி வந்தாள்
ஒப்பாரி வைத்தாள்
பெருமானே
என் பிள்ளை
இறந்து விட்டான்

கருணை பொழிக
அவன் கண் திறக்க
வேண்டும்

உருகி நின்றாள்
எல்லாம்
உணர்ந்தோன்
உதடு அசையவில்லை

மௌனங் கலைத்து
மாதவன் சொன்னான்
மகளே
சாலன் நுழையா
வீட்டிலிருந்து
கடுகு கொண்டு வா ...
கவலை தீரும்

ஆலாய்ப் பறந்தாள்
அபலை
காலன் எல்லா
வீட்டிலும்
காட்சியளித்தான்
கடுகு எப்படி
கைக்கு வரும்?

உண்மையை
உரைத்தார்
புத்தர்
உலக வாழ்க்கை
இது தான்

உற்சாக ஆடையை
கபில வஸ்து
உடுத்திக் கொள்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சிப் பூக்கள்
மலர்கின்றன
புகழ்ச்சிப் பாமாலை
புனையப்படுகிறது

சுத்தோதனன் முகம்
சூரியகாந்தியாகிறது
புத்திரன்
புத்தனாக வருகிறார்
போதி மரம்
புலம் பெயர்கிறது

ஞான சூரியன் முன்
நானா என்று
வான சூரியன்
அன்று வரவேயில்லை

நவசூரியன்
நடந்து வருவதைக் கண்ட
நட்சத்திரங்களும்
அவமானத்தால்
ஆகாயத்திலிருந்து
அப்படியே வீழ்ந்தன

வீதி மலர்கள்
விளக்காக
விரிந்த இலைகள்
விசிறியாக
வண்டுகள்
வீணை வாசிக்க
மக்கள் முழக்கம்
மத்தளமாக
புத்தர் தன் பூமியில்
கால் பதித்தார்

தந்தையின் பாதம்
தனயனின்
தலையணையாகிறது

சந்திரன்
சூரியனைத்
தாங்கிக் கொள்கிறது

பார்த்தால் போதும்
என்றொரு பாவை
வேர்த்தொழுக
விரைந்து வந்தாள்
வீட்டினை
முற்றாக
மறந்து விட்டு
செய்த வேலையையும்
குறையாக
விட்டு விட்டு
ஓட்டமாய் ஓடி
வந்தாள் அவள்
உத்தமனைக் காணா
உயிர் எதற்கு?

அயலூர்க்காரி
அழகியவள்
கயல் விழிமை
கரைந்தோட
கையால் அதைத்
துடைத்தபடி
காற்றாய்ப்
பறந்து வந்தாள்

அவரைக்
காணாத இந்தக்
கண் எதற்கு

கட்டிய சேலையை
ஒரு கையினாலே
தாங்கியபடி
முட்டிய ஆசை
முகத்திலும் பரவ
மோகினி அவள்
ஓடி வந்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டை அவிழ
அதை
மற்றொரு கையால்
முடிந்தபடி
கண்ட மனிதர்கள்
கண்கள் வியந்திட
கன்னி அவள்
காலை சிவக்க வந்தாள்

புத்தரைக் கண்டதும்
அவள் முகம்
பூவாக மலரும்
பொத்தென்று
வீழ்ந்திடுவாள்
புனிதனவன்
அருள் மழை
பொழிவான்
அதில் அவள்
பூரித்துப் போவாள்

அருவியின்
தூய்மை போல்
அருளாளர்
உருகி உருகி
வார்த்தைகளை
உதிர்த்தார்
கேட்போர்
உள்ளங்களில்
உபதேசம்
உட்கார்ந்து கொண்டது

மகன் வார்த்தைகள்
தந்தையின்
மனத்துக்கு
சுகம் தந்தன
அவன் சொன்னான்

என் குருநாதன் நீரே
இனிமேல்
உன் வழியே
எனக்கு உரிமை

சுத்தோதனன் மகன்
சுவாமி நாதன் ஆனான்
புத்தன் அவன் வழியில்
பூமி நடந்தது
போதி மரம் போதிக்கின்றது

உள்ளமே
வாழ்க்கையை
உருவாக்குகின்றது

துட்டனைத் துயரம்
நிழல் போல்
தொடரும்

வாழும் வகை
தெரிந்தால்
வம்பு சண்டை
வருமா?

கயவனுக்கேன்
காவி உடை

கட்டுப்பாடில்லா
மனத்தில் தான்
ஆசை
கண்டபடி முளைக்கும்

உயர்ந்த எண்ணங்களே
மனிதனை
உச்சிக்குக்
கொண்டு போகும்

உள்ளத்தைக்
கட்டுப்படுத்து
உவகை
ஊற்றெடுக்கும்

பயன் தரு
வழியிலேயே
பயணஞ் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவன் தவறை
ஆராயாதே
உன் தவறை முதலில்
உணர்ந்து கொள்

உனக்கு நீயே
உரிமை இல்லை
பின்பு ஏன்
உறவுகள்?

புயல் மலையைப்
புரட்டுமா?
சான்றோன் மனத்தில்
சலனமா?

உனக்கு நீதான்
உதவி

பயிரைக் களைகள்
பழுதாக்கும்
அது போல்
ஆசை மனிதனை
அழித்து விடும்

தேனீ போன்றவன்
ஞானி
தேனை மட்டும்
சேகரிப்பதால்

மனத்தை
வென்றவனே
மாவீரன்

உன் செயல் யாவும்
உனக்கே உரிமை

பாவமும் புண்ணியமுமே
ஒருவனின் பரிவாரங்கள்

ஆசையே துன்பத்தின்
ஆணிவேர்

அனைத்தும் மாயை
அறிந்து கொள்க

கோபத்தை
அடக்குபவன்
கடிவாளம் போட்ட
குதிரையைப் போன்றவன்

அறியாமையை விட
இன்னுமொரு
பாவம்
இருக்கின்றதா?

இறப்பு
மனிதனோடேயே
இருக்கின்றது
உறுதியானது
இது
ஒன்றுதான்

பணமே
ஒருவனின் பகைவன்

துறவிக்கு
எல்லாமே துரும்பு

ஐம்புலன்களின்
அடிமையா நீ
துன்பம் உனது
தோழன்

எல்லையில் காவல்
இல்லையானால்
எதிரி நுழைவான்
அது போல்
மனத்திற்குக் காவல்
இல்லையானால்
மனிதன் கெடுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயே
உன் வாழ்க்கையை
நிர்ணயிக்கின்றாய்

போதும் எனும் மனமே
பொக்கிஷம்

பற்றுள்ளவன்
எப்படி
முற்றும் துறந்த
முனிவன் ஆவான்?

உச்சியில் தீயது
உட்கார்ந்திருந்தாலும்
அதை
ஒருவனும் பாரான்
உன்னதமானது
எங்கிருந்தாலும்
அதை
உலகம் வணங்கும்

அந்திமத்தில் அச்சம்
இல்லை

வெறுப்பும் பகையும்
வெற்றியின் கனிகள்

பெரியோன் மனத்தில்
பேதம் இல்லை
உரிய தெல்லாம்
ஓர்ந்தவன் அவனே

நல்லவனை நாடு
தீயவனைத் தீண்டாதே

பொறாமையைப்
போக்கு – நீ
புனிதன் ஆகலாம்

துலங்கு நீர் போன்றது
தூயவன் உள்ளம்
அது என்றும்
கலங்குவதில்லை

அன்பு அதுவே
துன்பக் கடலில்
தோணி

போதி மரத்தின்
போதனைகள்
வைதிகத்தை
வாட்டி எடுத்தன

வேள்விகள்
உயிர்ப்பலிகள்
வாழ்விழந்தன
வரலாறு மாறியது

புதிய மதம்
பூபாளம் பாட
முதிய மதம்
முகாரி பாடியது

தர்மத்தைத் தந்த
புத்தர்
தளர்ந்து போனார்
எண்பது வயது அவருக்கு
இறப்பு வந்து
எதிரில் நின்றது

எல்லாம் உணர்ந்தவர்
எழுந்தார்
இரணியவதி நதி
அவரை
எட்டிப் பார்த்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குசனிச் சிரசப்
பூங்காவைக் கண்டதும்
ததாதருக்குக்
குதூகலம்
நிமிர்ந்து நடந்தார்
அங்கே நின்ற
இரண்டு சால்
மரங்களுக்கிடையே
அமர்ந்தார்........

அரிமா போலப் படுத்தார்
அய்யோ......
ஆவி பிரிந்தது
அழுதது உலகம்
தொழுதது கபிலவஸ்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெத்தலேகம் நான், பேசுகின்றேன்.......

என் பெயர்
இயேசு

தாய் மரியாள்
தந்தை சூசை
தாவீது பரம்பரை

பிறந்த இடம்
பெத்தலேகம்
பலஸ்தீனத்தின்
ஒரு
பழைய கிராமம்

மண்ணில் பூத்த
மனித மலர்களில்
தானும் ஒருவன்
ஆயினும்
விண்ணகமே
எனது வீடு

இரவில்
நான் மலர்ந்தபோது
நல்ல இருட்டு,
ஒரே ஒரு
வெள்ளி மட்டுமே
எனக்காக
ஓடி வந்தது

மண்ணைத் தான்
நான் இன்னும்
மனமார
நேசிக்கின்றேன்

கடவுட் தன்மை
பெற்ற
மனிதர்கள் வாழும்
கைலாயம்
அல்லவா, இது!

இது மட்டுமா?

பலஸ்தீனத்தின்
பாலை வெளிகளையும்
பாறைகளையும்
படகிலே
வலம் வந்த
ஏரிகளையும்
என்னால் எப்படி
மறக்கமுடியும்?

சின்னவயதிலேயே
சிந்திக்கத்
தொடங்கியவன் நான்
என்னைச் சூழ இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தைப்
பார்த்தபோது
எனக்கு
என்னவோ போலிருந்தது!

அனைத்துப்
பணிகளுக்கும்
என்னை
ஆயத்தம் செய்தவள்
என் அன்னையே!

என்னைப் பொறுத்தவரை
வாழ்க்கை
ஒரு போராட்டம்!

பாடுகள்
என் பக்கத்திலே
இருந்தன

ஏழ்மையும் நானும்
இரட்டைப் பிறவிகள்

நரிகளையும்
பறவைகளையும்
பார்த்து,
நான்
பொறாமைப்பட்டதுண்டு.

துயரம்
என் தோளிலேயே
தொத்திக் கொண்டிருந்தது

சந்தோஷம்
என்னைச்
சந்தித்ததுண்டு
அது
சிலசமயம்
சத்தியாக்கிரகம்
செய்ததுமுண்டு

தரித்திரம் தான்
என் தலையணை

பிறப்பிலிருந்து
இறப்புவரை
என்னால்
இதனைப்
பிரியவே முடியவில்லை

இள வயதில்
என் கைத்தாதையை
இழந்த நான்
நிழல் இன்றித்
தவித்த
என் நேசத் தாயை
விட்டு விட்டு
உங்களைத்
தேடித்தான்
ஓடி வந்தேன்

தொண்டு செய்யப்
புறப்படும் போது
பாசங்கள்
தொடரக் கூடாது
இல்லையா?

'புத்தகப்
படிப்பாளிகளை' நம்பி
நான் என்
பொதுப்பணியை
ஆரம்பிக்கவில்லை

நாலு புத்தகங்களைப்
படித்த 'ஞானிகளை'
ஒதுக்கி விட்டு
எழுத்தறிவில்லாத
இராயப்பனைத்தான்
என் சீடனாகத்
தெரிந்து கொண்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை
அனுபவத்திலிருந்து
வடிந்தொழுகும்
சாறுதானே ஞானம்!

இந்த ஞானம்
என் சீடர்களிடம்
நிறையவே இருந்தது

நான் யாரென்று
ஞானிகளுக்குத் தான்
தெரியும்

பெத்தலேமில்
நான் பிறந்த போதே
இந்தப் பேருண்மை
தெரிந்து விட்டது

சத்திரங்களும்
குடிசைகளும் தான்
சரித்திரத்தை
உண்டாக்கும்
என்பதற்கு
நானும் ஒரு சான்று.

சரித்திரத்தை
இரண்டாக்கும் சக்தி
என் பிறப்புக்கே
இருந்தது

உரோமைப் பேரரசு
என்னை
உதாசீனம் செய்தது
அது ஒரு காலம்!

இன்று அந்த
உரோமையில் தான்
என் இருக்கையே
இருக்கிறது

உலகம் முழுவதும்
எனது கொடியே
உயரப் பறக்கப்
போகின்றது!

கிறிஸ்து எனது
வேதத்தை
கிழக்கும்
ஏற்கும் காலம்
விரைவில் வரும்

நம்புங்கள்
நல்லது நடக்கும்

எனக்கு முன்பும்
ஞானிகள் பலர்
இருந்தார்கள்

அவர்களூடாக
நான், உங்களோடு
அளவளாவினேன்

இசையாஸ்
எரேமியாஸ்
இவர்களெல்லாம்
என் நாக்குகள்

காலத்திற் கேற்றபடி
கருவிகள் மாற்றப்படும்

அனைத்தினுள்ளும்
ஊடுருவியிருப்பவன்
நான் என்பதை
மறந்து விட்டு
இது அறிவியல் யுகம்
என்று நீங்கள்
ஆர்ப்பாட்டம்
செய்வதில்
என்ன அர்த்தம்
இருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுவை ஆயிரமாய்ப்
பிளந்தாலும்
அதற்குள்ளே
இருப்பவன் நான்

சூத்திரதாரி நானே
நீங்கள்
சுழலும் பொம்மைகள்

காலம்
எனது கைக்குள்

உலகத்தை
உருளச்
செய்பவன் நானே

எனது சுட்டுவிரலின்
அசைவிலேயே
நட்சத்திரங்களும்
கோள்களும்
இயங்குகின்றன

நில் என்றால்
அனைத்தும் நிற்கும்

நீங்கள் பூஜ்ஜியம்
அதற்குள் இருந்து
இராச்சியத்தை
நடத்துபவன் நான்

வானில் இருந்து
வந்தவன் நான்

தந்தையும்
நானும் ஒன்று
இதில்
விந்தை இல்லை
விளங்கிக் கொண்டால்

ஆனால்-

விளங்க முற்படுவது
வீண்
விவேகி அகுஸ்தீனே
வீழ்ந்து போனான்

எல்லா மனிதரும்
இறைவனின் சாயலே!

மனிதன் வடிவில்
மறைந்திருப்பவன்
இறைவனே

அடையாளம்
காண்பவன்
அதிட்டசாலி

இறைவன் சாயலாய்ப்
படைக்கப்பட்ட நீங்கள்
நானே இறைவன்
என்று
பிரகடனப்படுத்திவிடக்
கூடாது
என்பதற்காகத்தான்
உங்களுக்குள்ளே
மிருக உணர்வும்
உட் செலுத்தப்
பட்டிருக்கிறது

காயீன்
ஆபேல் கதை
இதைத் தான்
காட்டுகிறது

எனவே,
பாதி தெய்வம்
மீதி மிருகம்
இதுதான் நீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபூர்வமான
படைப்பு, இல்லையா;

ஒளி நான்
உயிர் நான்
வழி நான்
வாழ்வு நான்

என் வழியில்
இருட்டில்லை

என் பேச்சில்
இழுக்கில்லை

எந்தை என்னிலும்
நான் எந்தையிலும்
இருக்கின்றோம்

என்னூடாகவே
எல்லாம் நடக்கும்

மலையில் கட்டிய
மாளிகை நான்

உங்களுடையதே
இந்த உலகம்

இதைப்
பங்கு போடுவது
பாவம்

ஏழை பணக்காரன்
என்பதெல்லாம்
நீங்கள் போட்ட
எல்லைக் கோடுகள்

சூரியனும் நிலவும்
யாருக்கும்
சொந்தமில்லை

காற்றையும்
மழையையும்
உங்கள் கைக்குள்
அடக்க முடியுமா?

பிறகு ஏன்
பெரும் ஆரவாரம்

ஆதிக் கிறிஸ்தவர்கள்
அற்புதமானவர்கள்

பாதி உணவைக்கூட
பகுத்துண்டு வாழ்ந்த
பண்பாட்டுக் காரர்

பழைய ஏற்பாடு
என்பதே
என் பாட்டிற்குரிய
பல்லவி தான்

புதிய ஏற்பாடு
நான் புனைந்த கீதம்

சரணங்கள்
எல்லாம்
அதனுள்ளே
சங்கமம்

கண்ணுக்குக் கண்
பல்லுக்குப் பல்
என்ற
கற்காலச் சட்டத்துக்கு
கல்லறை கட்டிவிட்டு,

பகைவனுக் கருளும்
மனிதப் பண்பாட்டைப்
படிப்பிக்க
வந்தவன் நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையே
எனது இயக்கம்

எல்லா உயிர்களும்
எனது ஈர்ப்பிலேயே
இயங்குகின்றன

உங்கள்
விஞ்ஞான அறிவிற்கும்
ஓர் எல்லை உண்டு

அந்த எல்லைக்கு
அப்பால் இருக்கும்
எனக்குப் பெயர்தான்
இறைவன்

அனைத்து உயிர்களும்
என்னையே
அடையாளம் காட்டுகின்றன

உயிரற்றவையும்
என்னை
உறுதி செய்கின்றன

எல்லா மதங்களிலும்
நான் இருக்கின்றேன்

உண்மையே
என் உறைவிடம்

தனிமையையே
நான்
அதிகமாகத்
தழுவினேன்
அதில் தான்

தந்தையின் தரிசனம்
தாராளமாகக் கிடைத்தது

ஆற்றோரங்களும்
அழகிய மலைச்சாரல்களும்
ஆனந்த லோகங்களே

அங்கே தான்
என் அரியணையும்
இருந்தது

பாடுகள்
என் மீது
தொடர்ந்து
படை யெடுத்த போது
பயந்தே போனேன்

இதனால் தான்
எந்தையே
இந்தப் பாத்திரம்
என்னை விட்டு
நீங்கினால் நல்லது
என்று
என் இதயம்
கூவியது

என்றாலும்,
தந்தையின்
சித்தத்திற்கே
தாள் பணிந்தேன்

பெத்தானி
எனக்குப் பிரியமான
இடந்தான்
அந்தப் பெண்களில்
ஒருத்தி மரியாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைக்குரியவள்
மண்ணிற்
பிறந்தவளாயினும்
விண்ணையே
அவள் விழிகள்
நோக்கிக் கொண்டிருந்தன

மற்றவள், மாத்தாளுக்கு
மண் வாசனை அதிகம்

உலகக் கடலிலே
பயணஞ் செய்த
ஒட்டைப் படகு அது

நான்
ஏன் பிறந்தேன்?
சுதந்திரக் காற்றைச்
சுவாசிக்க முடியாதவர்கள்

வாழ்க்கைச் சிறையில்
வைக்கப்பட்டவர்கள்

வியாதி என்னும்
தளையால்
விலங்கிடப்பட்டவர்கள்

பொருள் வளம்
இல்லாததால்
பொட்டல் வெளியாய்ப்
பொரிந்து இடப்பவர்கள்

ஒழுக்கம் என்னும்
உண்மை அழகை
இழந்து விட்டு
பவுடர் பூச்சுக்களால்
தங்கள் பாவத்தை
மறைத்துக் கொண்டு

திரிபவர்கள்
அறியாமை
என்னும் இருளில்
அடைபட்டு
எதையுமே அடையாளம்
காணமுடியாது
அவதிப்படுபவர்கள்

நீதி மறுக்கப்பட்டு
நடுத்தெருவில்
நின்று கொண்டிருப்பவர்கள்

காலம்
பல வழிகளில்
கைதியாக்கியுள்ள
இந்த
மானிடப் பூச்சிகளைக்
காப்பாற்றவே
நான்
அவதாரம் செய்தேன்

எவரையும் நான்
எதிரியாக எண்ணவில்லை
ஏரோதன் உட்பட

மூப்பரும் குருக்களுமே
என்னைத் தங்கள்
முதல் எதிரி என
முழங்கினார்கள்

நீண்ட காலமாக
இவர்கள் தாம்
என்னோடு
நிழல் யுத்தம்
செய்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டு வயதிலேயே
இவர்களோடு
பகையைச்
சம்பாதித்துக் கொண்டவன்
நான்

ஆலயத்தில்
இந்த
அரை வேக்காடுகளோடு
நான் மோதிய போது
போலித்தனத்தின்
பொக்கிஷம் இவர்கள்
என்பதைப்
புரிந்து கொண்டேன்

இவர்களையே
நான்
வெள்ளையடிக்கப்பட்ட
கல்லறைகள் என்று
விமரிசனம்
செய்தேன்

வெளி வேடம்
இவர்களுக்கு
வெகு பொருத்தம்

இறைவனின் பிரதிநிதிகள்
என்ற இறுமாப்பு
இவர்களை
எங்கேயோ
கொண்டு போய்
நிறுத்தியுள்ளது

சதுசேயரும்
பரிசேயரும்

எல்லாச் சமூகத்திலும்
இருக்கவே இருக்கிறார்கள்

தாழ்ச்சி
இவர்களைக் கண்டதும்
தலை தெறிக்க ஓடித்
தப்பித்துக் கொண்டது

உள்ளத்தையும்
உதட்டையும்
ஒரு மைல் தூர
வித்தியாசத்தில்
இறைவன் இவர்களுக்கு
உருவாக்கிக்
கொடுத்திருக்கிறான்

வறுமை
இவர்களின்
வாசல் பக்கம் கூட
வரவில்லை

ஜெரிக்கோ
காட்டுப் பாதையில்
என்ன நடந்தது

அடிபட்டுக் கிடந்த
அந்த மனிதனை
ஆர் காப்பாற்றினான்?

சாமான்யமான
ஒரு சமாரித்தன்

மற்றவர்களிடம்
மனிதத் தன்மையே
இருக்கவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எருசலேம் ஆலயம்
என் இதயத்தில்
அப்படியே
ஒட்டப்பட்டிருக்கிறது

ஏன் தெரியுமா?

உயிர்ப் பலிகளின்
உச்சக்கட்டத்தை
அங்கு தான்
ஒரு சிலர்
நிறைவேற்றி வைத்தார்கள்

வேள்விக்காக
அங்கே
கொண்டு நிறுத்தப்பட்ட
வெள்ளாடுகள்
வெட்டி
வீழ்த்தப்பட்ட போது
அது
கோயிலாகவா
இருந்தது?

இரக்கத்தைத் தேடி
வந்த நான்
இரத்த
வெள்ளத்தில் அல்லவா
வீழ்ந்தெழுந்தேன்

கடவுளின் பேரில்
இந்தக்
கசாப்புக் கடையை
நடத்திய
பெரிய மனிதர்கள் தாம்

பின்பு
என்னைப் பிடித்து
பிலாத்துவிடம்
ஒப்படைத்தார்கள்

இவை
எல்லாவற்றுக்கும்
இந்தப் பரிசேயரும்
சதுசேயரும் தாம்
காரணம் என்று
சொல்லி விட முடியாது

தவறு
தன் தடத்தை
எல்லாப் பக்கமும்
பதிக்கின்றது

பாவம்
எந்தப் பக்கம் தான்
தன் பார்வையைச்
செலுத்தவில்லை

சின்னப்பன்
ஆரம்பத்தில்
என்ன செய்தான்

அகுஸ்தீன் வாழ்க்கை
ஆருக்குத் தெரியாது

என்னை
மூன்று முறை
மறுதலித்தவன்
அல்லவா
இந்த இராயப்பன்?

என்னுடைய
சிந்தனைகளையும்
வாழ்க்கை முறையையும்
இன்றையக் கிறிஸ்தவம்
பிரதிபலிக்கவில்லை
என்று நீங்கள்
சொல்வதிலும்
உண்மை இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் தெரியுமா?
என்னை
இதுவரை யாருமே
புரிந்து கொள்ளவில்லை
இதனால் தான்
எனது திருச்சபையில்
எத்தனையோ
மேடுகளும் பள்ளங்களும்.

பரவாயில்லை:
மனிதன் பலவீனன்
அதனால் தான்
அவன்
பாவங்களை
நான்
பொருட்படுத்துவதில்லை.

அனைத்துத் துன்பத்திற்கும்
காரணம்
அறியாமை

இதிலிருந்தே
எல்லாத் தீங்குகளும்
உற்பத்தியாகின்றன

ஆதாம்
ஏவாளிடமிருந்தே
இது ஆரம்பமாயிற்று

பகுத்தறிவு
இல்லாததால் தானே
ஏவாள்
பாம்பிடம்
ஏமாறினாள்

எனவே
அறியாமை
இருக்கும் வரை
அய்யோ பாவம்.

ஆனாலும்
உங்கள் ஏற்றம்
அருகிலேயே
இருக்கின்றது

சுமை சுமப்பவர்களே
என்னிடம்
வாருங்கள் என்று
சும்மா வா
சொன்னேன்.

என் நுகம்
இனியது
எல்லாரும் வாருங்கள்

இரட்சணியம்
என்பது
இருட்டினில்
இருக்கும் உங்களை
ஒளிக்குக்
கொண்டுவரும்
ஓர் உன்னத பணி

பெத்தலேகம்
எனது
ஜனனத்தைப்
பிரகடனம்
செய்தது போல
எருசலேம்
எனது இறுதிமுடிவை
இனிதே
நிறைவேற்றியது

எனது
பாலைவனப் பயணம்
பாடுகளுக்கான
ஒத்திகை
என்பதை அறிவேன்

கல்வாரி
என் கண்முன்னே
எப்போதும் தெரிந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணமே
எனக்கு
மகிமை தந்தது

மரணத்தில்
இருந்து வந்ததே
எனது மறுபிறப்பு (உயிர்ப்பு)

கேளுங்கள்
கிடைக்கும்
தேடுங்கள்
கண்ணில் தெரியும்
தட்டுங்கள்
தாள் திறக்கும்

இடுக்கான வழியே
ஏற்றது
அகன்ற வழியில்
ஆபத்திருக்கும்

முதல் இடம் தேடி
முந்துபவர்கள்
கடைசி இடத்தில்
அமரும்
காலம் வரும்

ஊசியின் காதூடாக
ஒட்டகம்
நுழையினும்
காசாசை
உள்ளவன்
கடவுளடி சேரான்

புறாவும், பாம்பும்
புகட்டும்
பாடம் என்ன?

கபடமின்மை
விவேகம்
இவை இரண்டுமே

நீங்கள்
அணியவேண்டிய
ஆபரணங்கள்

பணக்காரன்
அள்ளித் தரும்
பணத்தை விட
ஓர் ஏழை தரும்
காணிக்கையே
உயர்ந்தது

பற்று அற்ற
நிலை தானே
பரலோகம்
சேர்க்கும்

இருட்டில் இருப்பதை
இறைவனே அறிவான்

மற்றவனைத் திருத்துகின்ற
மனிதனே!
நிலைக்கண்ணாடி முன்
நின்று பார்

நோன்பு
இருக்கும் போது
உன்னை
நோயாளி போல்
காட்டலாமா?

விரதம்
நீ இருப்பதற்கு
இது நல்ல
விளம்பரம் அல்லவா?

ஒரு கன்னத்தில்
உன்னை ஒருவன்
அறைந்தால்
மறு கன்னத்தை
அந்த மனிதனிடம் காட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு உடைகள்
இருந்தால்
ஒன்றை
இல்லாதவனுக்குக்
கொடு

கண் தான்
உனது
கை விளக்கு

உடலைக் காக்கும்
ஒளி இதுவே

உதவி நீ
ஒருவருக்குச்
செய்தால்
அதை
உலகமெலாம்
சொல்லாதே

தீர்ப்பிடாதீர்கள்
ஏனெனில்
அதுவே உங்களைத்
திரும்பி வந்து
தாக்கும்

முத்துக்களைப்
பன்றிகளின்
முன் போடலாமா?

நல்லவற்றை
நாய்களுக்குத்
தரலாமா?

கனிகளே
மரங்களை
அடையாளம் காட்டும்

கண்ணில்
எண்ணெய்
விட்டுக்கொண்டு

கவனமாக இருங்கள்
ஓநாய்களும்
வேதம் ஓதலாம்

மற்றவர் பிழையை
மன்னிப்பீர்
இல்லையானால்
இறைவன்
உங்களை ஏற்கான்

கடவுள்
வார்த்தைக்குக்
காது கொடுப்பவரே
எல்லாப் பேறும்
எய்தியவராவார்

புதியதோடு
பழையதைப்
பொருத்தலாமோ?
இரண்டுமே
இதனால் இற்றுப்போம்

சமுதாயத்தை
நெறிப்படுத்தவே
சட்டங்கள்

ஆனால்,
சட்டங்களுக்காகவே
மக்கள் என்பது
பரிசேயர் சாத்திரம்

புனிதமான நாளாம்
அதனால்
நல்லது கூடப்
புரியக் கூடாதென்பது
அவர்களின்
போதனை

நல்லது செய்யவும்
நான் பார்க்கிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவத்தில்
வாழ்பவனுக்குப்
பார்வை இல்லை

தன்னை நேசிப்பவன்
தன்னை இழக்கிறான்

தன்னை இழப்பவன்
தானாக உயர்கிறான்

உள்ளத்தைக்
காட்டும்
நீ உதிர்க்கும்
வார்த்தை

என்னூடாகப் பேசுவது
இறைவனே

சொல்வதெல்லாம்
அவரது சுருதியே
திராட்சைக்
கொடி நான்
அதில்
இரண்டெழும்
கிளைகள் நீங்கள்

பழம் கொடாக்
கிளையெல்லாம்
பாழாகும்

என்னில் நீங்களும்
உங்களில் நானும்
இருந்தால் தான்
உங்கள் மனம்
உறுதியாகும்

பணி செய்யப்
பழகு
இதுவே
தலைமைக்கான
தகுதி

பாலைவனச் சோதனை
என்
வாழ்க்கையிலே
மிகப் பெரிய
பாடம்

தன்மையைத்
தீமை
வெல்ல
முடியாதெல்பதை
நன்கு
எடுத்துச் சொன்ன
நிகழ்வு அது

தீய மரத்திலிருந்து
தீஞ்சுவைக் கனி
பிறப்பதுண்டா?

நல்ல மரம்
என்றும்
கெட்ட கனியை
நல்குவதில்லை

விசுவாசியுங்கள்
இந்த மலைதளே
விலகிச் செல்லும்

இன்று—நாளை
பற்றி
ஏன் கவலை?

காகம் குருவிகளைக்
கவனிப்பவன்
உங்களையா
காக்காமல் விடுவான்

எங்கே
உங்கள் செல்வமோ
அங்கே
உங்கள் இதயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கு நீங்கள்
அதை
வீசும் காற்றில்
அணைய விடலாமா

உப்பு நீங்கள்
அதன்
உறுசுவை போனால்
எதற்காகும்

உதவி என்று
ஒருவன் வந்து
உன்னைக் கேட்டால்
அவன் உள்ளம்
நிறையச் செய்

தீயதை விலக்கு
தூயதைப் போற்று

ஒருவன்
இரு எசமானுக்கு
உட்பட்டு
நடக்க முடியுமா?

வேண்டும் போது
வேஷம் எதற்கு

எது உயர்ந்தது?
இறைவனுக்கு
நீ தரும்
காணிக்கையா?
அல்லது
சகோதரனோடு
சமாதானமாக
வாழ்வதா?

உதவி
செய்தவனுக்குத் தான்
உதவுவதா?
இல்லை

உதவி செய்யாதவனுக்கு
உதவுவதே உயர்ந்தது

சழிக்கப்பட்ட கல்லே
மூலைக்
கட்டடத்திற்கு உதவும்

எளிய
மனத்தினர்க்கே
இறை அரசு

அழுவோர்க்கே
ஆறுதல்

பொறுத்தாரே
பூமி ஆள்வார்

நீதியில் பற்றா?
நெஞ்சம் நிறையும்

இரங்கு நீ
இரங்குவார்
எல்லாரும்

தூய மனத்திலேயே
கடவுள் துலங்குவார்

சமாதானம்
செய்வோரே
சர்வேசுரன்
குமாரர்

நீதிக்கான
போராட்டமா
நிச்சயம் கிடைக்கும்
நித்திய அரசு

பரமபிதா அளித்த
பத்துக் கட்டளைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு எனும்
சக்திக்குள்
அடங்கி விடும்

மன்னியும் தந்தையே
இந்த மனிதர்கள்
அறியாமற்
செய்கிறார்கள்......

இப்படி

மூன்றாணியில்
தொங்கிக்
கொண்டிருக்கும் போதே
முடிவாகச்
சொன்னேன்

இது
எதைக் காட்டுகிறது
என் அன்பின்
ஆழத்தையல்லவா?

அன்பு தான்
அனைத்து
நோய்களுக்கும்
மருந்து


அன்பு என்பது
தன்னை
அடுத்தவனுக்காக
அளிப்பதே

அன்பிற்காகவே
நான்
அவதாரம் எடுத்தேன்

அன்பே நான்
அன்பே
கிறிஸ்தவம்

இதுவே
எனது தத்துவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரேபியாவில் ஓர் அற்புதம்

ஆசியாவின்
தென் மேற்கில்
ஒரு
தீபகற்பம்;

அரேபியர்களின்
ஆஸ்தானம் அது;

தேசத்தின்
நடுவில்
ஒரு
திருப்பதி

பரிசுத்தன்
ஒருவனின்
பரலோகம்

மக்கா
மற்றுமொரு
மோட்சம்

பாலைவனத்தின்
பசுஞ்சோலை.

சோலையின்
சுந்தரம்
சொல்லில்
அடங்குமா?

நிழல்
நிலத்தில்
நீண்டு
படுத்துக் கிடக்கும்.

குளுமை
குதூகலிக்கும்.

இளமை
இனிக்கும்.

வளைய வளைய
வரும்
வண்டுகளின்
இசை கேட்டு
வானத்துப் பறவைகள்
சொண்டுகளைத் திறந்தபடி
சொக்கிப் போயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவைப் பார்த்து
நீ என்ன அழகா?
என்று கேட்கும்
மலர்கள்
அரேபியாச் சோலையிலே
ஆயிரம்.

குன்றுத்தாயின்
அருவிக் குழந்தைகள்
நிலத்தில் தவழ்ந்து
நிமிர்ந்து
நடக்கும்.

ஆற்றங்கரையில்
அமைதி
அரியாசனம்
போட்டு
அமர்ந்திருக்கும்.

கரையில்
அலைகள்
காவல் காக்கும்

பேரரசு செய்யும்
பேரீச்சை
மரங்களின்
ஊர் அது
அதனால்
உலகமே
அங்கு
உட்கார்ந்து
கொள்வதுண்டு.

வெயில் மழையில்
அரேபியா
வெந்து போகும்

ஒட்டகமோ
அதில்
ஓட்டப் பந்தயம்
நடத்தும்.

இளவேனிலிலும்
இலையுதிர்
காலத்திலுமே
மழை
அந்த மண்ணில்
விளையாடும்,

புற்கள்
ஒரு பக்கம்
கற்கள்
ஒரு பக்கம்
அந்தப் பூமி
ஒரு புதுமை.

விண் வளம்
விரல் அளவு
மண் வளம்
மலை அளவு

வனாந்தரந்தான்
ஆனாலும்
வலது குறையா
வளம் அதற்கு

ஊறும்
எண்ணெய்
ஒவ்வொரு
ஊசி முனையிலும்
ஆறும்
தோற்றுப் போம்

அரேபியாவை
அரசனாக்கியதே
இந்த
அற்புதந்தான்.

அமெரிக்காவின்
செல்வமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் முன்
அற்பமே

குறையில்லாதவர்கள்
குறேஷியர்கள்
குன்றின்
தீபம் போல்
அவர்கள் குலம்

இனத்தின்
ஏக தலைவன்
அப்துல் முத்தலிபு.

ஆண்மையே
அந்த மனிதனின்
அலங்காரம்.

பிள்ளைச் செல்வம்
இவர் பெற்ற
பெரும் செல்வம்.

செல்வத்துள்
ஒரு செல்வம்
அப்துல்லா.

அழகன் அவன்
இளமை
அவன் மேனியை
இறுகத்
தழுவியது.

கல்யாண ஆசை
அவன்
கண்களில்

முத்தலிபு
முடிவு செய்தார்
புத்திரனுக்குப்
பூரிப்பு.

ஆமினா தான்
அரேபியாவின்
அழகு ராணி
பூமியின்
பூரண நிலவு.

ஆளை விழுங்கும்
அமுத விழிகள்
அவளுக்கு

கன்னி அவளைக்
கண்டாலே போதும்
கல்லுக்குக் கூட
கைகால் முளைக்கும்.

மேனியெல்லாம்
அழகு மேயும்

நடையில்
ஒரு நளினம்
இடை
பட்டு இழை.

யௌவனம்
அவளிடம்
யாசகம்
கேட்கும்

ஈச்சம்பழ இதழ்கள்
ஆச்சரியப்படுத்தும்
அரேபியா அணங்கு.

ஆமினாவின்
அழகு
அப்துல்லாவை
அப்படியே
அள்ளிக்கொண்டது.

ஒரு மனமானார்
இருவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்திற்குத்
திகதி
குறிக்கப்பட்டது.

முத்தலிபு
அரண்மனையில்
முழு உலகமே
முட்டி மோதியது.

கைத்தலம் பற்றினான்
காளை
சித்திரை நிலவானாள்
சேயிழையாள்.

திருமணத்திற்குப் பிறகு
சில திங்கள்கள்
தேய்ந்தன.

பக்கத்துத் தேசம்
சிரியாவிற்கு
அப்துல்லா
பயணமானார்

பொருளீட்டச்
சென்ற
இளைஞனை
வியாதி போய்
பிடித்துக்
கொள்கிறது.

பாவம்
அப்துல்லா
பாதி வழியில்
பரலோகம்
போனார்.

மக்கா அழுதது
மனைவி ஆமினா
துக்க
வெள்ளத்தில்
தோய்ந்து போனாள்.

விதவை......
இவ்வளவு
விரைவிலா?

விதியே
இது என்ன
விளையாட்டு?

ஆறும் மொழி
சொல்ல
ஆயிரம் பேர்
ஆனாலும்
அபலையானாள்
அவள்

மெழுகுவர்த்தியாக
அவள்மேனி
கவலைத் தீயில்
கரையத்
தொடங்கியது.

ஆனைப் போர்
நடந்த
அதே ஆண்டு
ரபி உல்
அவ்வல் மாதம்
பன்னிரண்டாம் திகதி

மக்காவில்
ஒரு
மகவு பிறந்தது
சொர்க்க வாசல்
திறந்து
சோபனம்
பாடியது.

ஆமினாவின்
அழகுச் செல்வம்
அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமி
புஸ்பமழை பொழிந்தது.

காலையிலேயே
நல்ல கலகலப்பு.

ஆதவன் வானத்தை
அலங்காரம்
செய்தான்

பூங்காற்று
பூபாளம் இசைத்தது

உற்சாகத்தால்
பறவைகள்
உரத்துப் பாடின.

முத்தலிபு வீடு
மோட்ஷமானது

பேரன் மீது
முத்தலிபுவுக்குப்
பேராசை.

என்ன பெயர்
சூட்டலாம்?

ஏதேதோ
சொன்னார்கள்
முன்னம்
யாரும் இடாத
மோகன நாமம்
முகம்மது.

துள்ளி
எழுந்தார் கிழவர்
துளிரை
அள்ளி எடுத்தார்
அதனைக்
கிள்ளி ....

விளையாடி
கிச்சுக் கிச்சு மூட்டி
முத்தே
உன்பெயர்
முகம்மது என்றார்
மூழு உலகமும்
வியந்தது.

விதிப்படி
ஏழாம் நாளில்
விருத்த சேதனமும்
நடந்தது.

முகம்மது
தந்தையின் முகமே
காணாதவன்
அகமெல்லாம்
அன்னையே இருந்தாள்
அப்போது
அவனுக்கு ஆறு வயது
இப்போதும்
அவன் தலையிலே
இடி.

ஆம்......
அன்னை ஆமினா
கண்ணை மூடினாள்
என்ன கொடுமை?

இந்த வயதில்
ஒரு பிஞ்சு
இரு குரவரையும்
இழந்து நிற்பதா?

பாட்டன்
முத்தலிபு
பதறிப் போனார்
கேட்டவர்களெல்லாம்
கேவி அழுதனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவைச் சபித்தார்கள்
பாவி அவன்...
பாலைவனம்
முழுவதுமே
கூவியது

குழந்தை
முகம்மதுவுக்கு
இந்தக்
கூக்குரல்
விளங்குமா?

விழுந் தெழுந்து
அவன்
மண்ணில்
விளையாடிக்
கொண்டிருந்தான்

இன்னும்
இரண்டு ஆண்டுகள்
எட்டி நடந்தன

கண்ணாய் விளங்கிய
முத்தலிபுவும்
மண்ணானார்.

எட்டு வயதில்
முகம்மது
எல்லாம் இழந்தான்
பட்ட மரமா?

அபுதாலிப்......
அப்துல்லாவின்
அண்ணன்.

பிஞ்சு
முகம்மதுவின்
பெரியதந்தை.

அஞ்சாய் என்று
அபயம் தந்தார்

பெரியப்பாவோடு
பிள்ளை அவனும்
உரிமையோடு
ஒட்டிக்
கொண்டான்.

வளரவளர
முகம்மது
வாணிபத்தில்
வசமானான்.

இப்போது
இருபத்தைந்து வயது
இளைஞன் அவன்

உருவத்தைக்
கண்டால்
பெண்கள்
உறங்கவே மாட்டார்.

அழகும்
ஆண்மையும்
அவனை
ஆக்ரமித்தன.

கதிஜா
என்றொரு
கைம்பெண்.

நாற்பது
வயதானாலும்
நங்கையவள்
பார்ப்பதற்கு
நல்ல அழகு.

வனப்பும்
வாலிபமும்
அவள் வசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலுக்காக
அந்தத்
தோகையிடம்
சென்றான்
முகம்மது
தொட்டது
நெஞ்சம்.

கதீஜாவின்
சிறிய தந்தை
கை கொடுத்தார்.

அபுதாலிபும்
ஆசிர்வதித்தார்
காட்டில்
எறித்த நிலா
முகம்மது
வீட்டு நிலாவானது.

முப்பத்தொன்பது வயது
முகம்மதுவுக்கு
எந்நேரமும்
அவன்
ஏகாந்தத்தில்

குகையொன்று
அவன்
கோயிலானது

தியானத்திற்கேற்ற
திருத்தலம் அது
தினமும் முகம்மது
அங்கே தான்

ஹிரா
என்றந்தக் குகை
முகம்மதுவின்
வாழ்க்கையைக்
கீழ்மேல்
ஆக்கியது

நீராகாரம்
இன்றி
அவர்
நிறைந்த அமைதியில்
நிலைத்தார்.

புலன்கள்
ஐந்தும்
முகம்மதுவுக்குத்
தொண்டு
புரிந்தன
நலம் தரும்
ஞானம்
அவரை
நாடி வந்தது.

சித்தக் குளத்தில்
ஆயிரம்
சிந்தனை அலைகள்
ஆயினும்
முகம்மது
தெளிந்த நீரானார்.

குகையில்
ஒரு நாள்
முகம்மது
குளிர்ந்த முகத்தோடு

அப்போது
மின்னல் கீற்றொன்று
மிதந்து வந்தது
மெல்ல

பேரதிர்ச்சி
முகமதுவுக்கு
இருட் குகையில்
இப்படியொரு
எழில் விளக்கா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த உருவம்
வாய் மலர்ந்தது

வஹீ ஓதுக.

அடுத்தடுத்து
அதிர்ச்சி.

எடுத்துச் சொன்னார்
முகமது
எனக்கு
எழுத்தே தெரியாது
மீண்டும் அந்த
மின்னல்
மெல்ல
ஒளிர்ந்தது.

ஓதுக ....
ஒன்றும் புரியாத
முகமது
அதே பதிலையே
உரத்துச் சொன்னார்.

மூன்று தடவை
முயன்றது
அந்த
மோகனம்
முடியவில்லை.

இறுதியாக
இப்படிச் சொன்னது.
அந்த
எழில் நிலா.

படைத்தோனின்
பரிசுத்த நாமத்தை
எடுத்தோதுக.

சதையிலிருந்தே
மனிதனைச்
சர்வேசுரன்
படைத்தான்.

அறியாதவற்றை
மனிதனுக்கு
அவனே
அறிவித்தான்.

வடிவமது சொன்னதை
முகம்மது
அப்படியே
வசனித்தார்.

திருவொளி
மறைந்தது

திகைத்தார்
முகமது

இல்லம் திரும்பிய
முகமது
எல்லாம் சொன்னார்
இனியவளிடம்

இறுதித் தூதர் இவரே
ஏந்திழையின்
இதயம் பூரித்தது

இருளை வெல்லும்
குர் ஆனின்
இனிய வாசகங்கள் சில
ஓர் இரவு
இறங்கி வந்தன
அருள் வெள்ளம்
அரேபியாவில்
அலை மோதியது.

வான விளக்கு
எரியும்
வனாந்தரத்தில்
ஞான விளக்கானார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம்மது
நாலு திசையும்
அவரிடம்
நடந்து வந்தன

இவரா?
எழுத்தறிவில்லாதவர்
அவனியின்
முகத்தில்
ஆச்சரியக் குறி!

முகமது
இப்போது
முற்றுமுணர்ந்த
நபி,

இஸ்லாம்
அவர் கண்ட
இறைவேதம்

இப்ராகிம் நபியின்
வாரிசு
இவரே.

மூசா நபி
ஒரு
முன்னோடி
ஈசா நபிக்கு
இளையவர்

ஞானி
நபியின்
நாவசைத்தது

மனிதன்
உருவில்
மறை பொருளா?

புன்மையில்
தோன்றுமா
புனிதம்!

கல்லைச்
செதுக்கினால்
வருவது
கலை
அது
எப்படிக்
கடவுளாகும்?

நிழல்
நிஜமாகுமா?

அல்லாவே
எதற்கும்
ஆதாரம்

எல்லாம்
வல்லவனை
எப்படிச்
சிலையாகச்
செய்யலாம்?

அரூபி அவன்
ரூபம் எதற்கு?

விக்கிரகங்களால்
விக்கினமே

தெய்வம் ஒருவனே
தெரிந்துகொள்க
உய்யும் வழி
அவன்ஒருவனே

ஆயிரம் தெய்வம்
என்பது
அபஸ்வரம்
தூயன் நபி
துணிந்து
சொன்னார்

சூரியனும்
நட்சத்திரமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயம்பு அல்ல
சூத்திர தாரி
அல்லாவே.

உயிர்ப் பலியை
உடனே நிறுத்துக
உரத்துச் சொன்னார்
நபி

இரக்கமுள்ளவன்
இறைவன்
அவனுக்கேன்
இரத்தாபிஷேகம்?

அடிமையாக
யாருமில்லை

அந்தஸ்தைத் தருவது
ஒழுக்கம்
அதிகாரமோ
பணமோ அல்ல

சுதந்திரம்
பெண்களின்
சொத்து

கைம்மை மீது
காறி உமிழ்க
வையத்தைப்
புதிய வழியில்
நடத்துக

நபியின்
வார்த்தை
மக்காவுக்கே
நஞ்சானது

பூர்வீகச் சிந்தனைகளின்
புகலிடம்
அது
பொங்கி எழுந்தது

சொந்தமே
நபியைச்
சோதித்தது

பந்தமே
அவரது பகை

பகை
படையெடுத்தது
பயந்தார்
அபுதாலிப்

பெரிய தந்தையிடம்
பெருமான்
சொன்னார்

இஸ்லாமே
எனது வேதம்
என்னுயிரும்
இதற்கே

அபுதாலிப்
அமைதியானார்

கதீஜா
நபியின்
வலது கரம்

மக்கா எங்கும்
மறை
முழங்கியது

ஆயினும்
பாலைவனத்தில்
பகைத்தீ
தொடர்ந்து
பற்றி எரிந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சும்மா விடலாமா
முகம்மதுவை! அவன்
சொல்வதெல்லாம்
சுத்தப் பொய்

மூத்தையர்
எல்லாம்
முட்டாள்களா?

வித்தை
அவன் வேதம்

மக்கா
இவனை
மன்னிக்காது

மரணம்
இந்த
மண்ணிலேயே

கல்மழை
பொழிந்தது
காடையர்
கூட்டம்

அல்லா
நபிக்கு
அபயமளித்தார்

புள்ளி
மானைச் சுற்றி
புலிகள்
கூட்டம்

வீட்டைச் சுற்றி
வலை
விரிக்கப்பட்டது

விண்ணகம்
விண்டுரைத்தது

விரைந்து செல்
வேறிடம்

அழியா நட்பின்
அடையாளம்
அபூபக்கர் சித்திக்

ஒளிக்கு
இருள்
உதவியது

மக்கா
மதீனாவைச்
சேர்ந்தது

மகிழ்ச்சி வெள்ளத்தில்
மதீனா
புகழ்ச்சி மொழிகள்
பூமி எங்கும்

பிறைக் கொடிகள்
வானில்
பின்னிக் கிடந்தன

நறுமணத் தைலங்கள்
நான்கு திசையும்
திருமணம் பரப்பும்
தித்திக்கும்

தரையெல்லாம்
கோலங்கள்
தங்க விரிப்புக்கள்

சாலையின்
இருமருங்கும்
சந்திரோதயங்கள்

பர்தா மூடிலுக்குள்ளே
பால் நிலவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோலை மலரைத்
தொட்ட காற்று
சுகந்தம் அள்ளிச்
சொரிந்தது

சூரியன் அன்று
சுடவேயில்லை
ஆரியன் அவன்
அடக்கமானான்

பாலைவனம்
பனியாய்க்
குளிர்ந்தது

சோதி மயம் மதீனா
சொர்க்கமும்
தோற்றுப் போம்

ஒட்டகத்தில்
பவனி வந்த
நபிகள் நாயகம்
ஓரிடத்தில்
இறங்கினார்

கட்டி அணைத்தது
மதீனா
கடலின் கரை
உடைந்தது
மதீனா சூடியது
மகுடம்

கோபத்தில்
மக்கா
கொழுந்து
விட்டெரிந்தது
மதீனாவுக்கு
அது
மடல் அனுப்பியது

பிரிவினைக்காரன்
முகமது நபியைப்
பிடித்துத்தா

கட்டளை
காற்றில் பறந்தது

போர் மேகத்துள்
அரேபியா வானம்
புதைந்து போனது

மண்ணின் வாசனை
அதன்
மைந்தர்களிடம்

முரட்டுத்தனமே
அவர்களின்
முதுகெலும்பு

சண்டை
என்றால்
சர்க்கரை
பொங்கல்

வில்லும் அம்பும்
விரல்களில்
கல்லும்
ஆயுதமானது
கைகளில்

வைத்த குறி
வழுவுமாமோ?
பொய்த்த உடல்
பூமியிலே புரண்டது

இளநீர்க்
குலைகளாக
எதிரிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைகள்
செருக்களம்
செங்கடலானது

பிணக் குவியல்கள்
பிரமிட்டுகளாக
வனாந்தரம்
வாய் விட்டழுதது

வளைக்கரங்களிலும்
வாள்கள்
கிழவி கூட
எதிரியைக்
கிழித்தெறிந்தாள்

நபியின் கையில்
வாள்
நர்த்தனமாடியது
நரிகளுக்கும்
நாய்களுக்கும்
நல்ல வேட்டை

இஸ்லாமின்
வரலாறு
இரத்தத்தால்
எழுதப்பட்டது

மக்கா தோற்றது
மதீனா வென்றது

ஈசா நபி
இன்னுயிர் நீத்து
600
ஆண்டுகளுக்குப் பிறகு
ஒரு நாள்......

அறுபத்து மூன்று வயது
நபிகளை
அந்திமம்
காய்ச்சல் எனும் பேரில்

கட்டித்
தழுவுகிறது

சகாராப்
பாலைவனமாக
அவரது சரீரம்
ஆனால்.........
உள்ளமோ

அல்ப்ஸ் மலை
உச்சியாக ......

நன்மொழிகள்
நபியின் இதழ்களை
நனைக்கின்றன.

அல்லா ஒருவனே
அனுக்கஞ்சுக

நல்லோர்க்கு
நன்றி
சொல்க

கல் மனங்கள்
கசியட்டும்
உன்
கருணையாலே

தீமை
நல்ல முஸ்லிமைத்
தீண்டாது

அநாதையின்
இல்லமே
அல்லாவின்
பள்ளிவாசல்

அறியாமையே
ஒரு மனிதனின்
வறுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரத்துவமே
நான் சொல்லும்
சமயம்

சரியான
வழியிலேயே
பொருளைச்
சம்பாதிப்பீர்

அழகிய
ஆத்மாவே
ஒரு
பெண்ணின்
அலங்காரம்

இறைவனை
நம்புவோன்
அடுத்தவனை
இம்சிக்கலாமா?

நாவிலிருந்தே
குற்றங்கள்
நாளும்
பிறக்கின்றன

பல மனைவியரும்
பக்கத்தில் இருக்க
நல உரைகள்
நாவில் இருந்து பிறக்கின்றன

வாழ்வு
அவர் வசமிருந்து
போகின்றது

கத்தி
அழுகின்றனர்

அவர்
கரம் பற்றியோர்
கண்ணீர்க் கடல்
பெருக்கெடுக்கின்றது

சகாராப் பாலைவனம்
மீண்டும்
சாகரம் ஆகின்றது

மதீனா
முழுவதுமே
அவர்
மனையில்
கூடுகின்றது

ஒட்டகங்களும்
ஓடி வந்து
அவர் உடலை
எட்டிப் பார்க்கின்றன.

உணர்ச்சி அலைகள்
எங்கும்
உரத்து வீசுகின்றன

மண்
குளிர்ந்தாலும்
மனங்கள்
கொதிக்கின்றன

அப்போது
அமைதியின் வடிவம்
அபூபக்கர் சித்திக்
எழுந்து நிற்கின்றார்

இமாம் அவர் இதழ்கள்
விரிகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஒளி
ஓடிப்போனது
அரேபியா
முழுவதும்
ஒரே இருள்

நீரில்
குளித்தன
அவரின்
நேத்திரங்கள்


வானமும்
தன்
வசமிழந்தது

வனாந்தரத்தில்
மழைப் பூக்கள்
வந்து விழுகின்றன,

அல்லா ...........
அல்லா .........
எல்லா
இதயங்களும்
மேலே
எழுகின்றன ........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரமஹம்சர் ஒரு ஞானப்பழம்

ஆண்டிக் கோலத்தில்
ஓர் அந்தணன்
அவன்......

சந்திரமணி தேவியின்
வயிற்றில்
வந்துதித்த சூரியன்

வங்கம்
இவனது வருகையால்
தங்கமாகப்
பிரகாசித்தது

கரையில்லா
சந்தோசக் கடலில்
காமாப் புகூர்
மூழ்கியது

காளி அருள்
அவனுக்கு
கடல் போல
வாழி என
அவள் வாழ்த்தினாள்

ஞானம் அதனால்
இவனிடம் நடந்து வந்தது
வானம் குனிந்து
வணங்கியது

தட்சணேஸ்வரமும்
ஒரு
தத்துவப்பாடசாலையானது

பூசாரி அவன்
பூமியைப் புனிதம்
செய்ய வந்த
ஆசாரி

பிறப்பால்
பிராமணன் தான்
ஆனால்
பிராணிகள் அனைத்திலும்
பிரமத்தைக் கண்டவன்

புலியிலும் பிரமத்தைப்
பூசித்தவன்

புத்தகப்பூச்சி
நரேந்திரன்
இந்தப் பூசாரியிடம் தான்
நித்திய ஞானத்தை
நிறையவே பெற்றான்

'நான்' இல்லாத
ஞானி இவன்

திருமாலின்
ஒரு அவதாரம்

ஆன்மீகமே
இவனது அறம்
தபமே தாகம்
நிஸ்டையே இஸ்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாந்தமே
நெஞ்சில் வீற்றிருந்தது

பேதம் எதுவும்
இவன்
பிறப்பிலேயே இல்லை

நான்கு வேதங்களையும்
இவன் நாவே
தாங்கியது

கீதையே
இவனின் ஆத்மகீதம்

சாதிசமய பேதம்
இவன்
சரித்திரத்திலேயே இல்லை

இயேசு கிறிஸ்துவும்
இவன் கண் முன்
இறைவனே

இஸ்லாம் நெறியிலும்
தன்
இஸ்ட சக்தியைக்
கண்டவன்

பால்ய வயதிலேயே
பற்றறுத்து
கௌபீனத்தோடு
காட்சி தந்தவன்

பார்ப்பதெல்லாம்
இவனுக்கு
பரமாத்மாவே

ஏக பத்தினி விரதன்
இராமன்
ஆனால் இவன்
எப்போதும் ஏகாந்தியே

பார்த்தவர்களுக்கு
கதாதரர் ஒரு
பைத்தியக்காரன்
பாமரன்

இராமனும் கிருஸ்ணனும்
இந்த
இராமகிருஸ்ணனே

ஆனாலும்
இவன் ஓர்
அத்வைதக்காரன்

பரமஹம்சர்
ஒரு ஞானப்பழம்

பழம் இதனைப்
பக்குவமாய் உண்போம்
வளம் தரும்
வாழ்வு வரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் அரை நிர்வாணியின் நினைவாக...

போர்ப்பந்தர்
ஓர்
பூர்வீகக்கிராமம்

இந்தியாவின்
சூரியன் நீ
இங்கே தான்
உதயமானாய்

மனிதனாகப் பிறந்து
மகாத்மாவாக
மறைந்தவன் நீ!

தென்னாபிரிக்காவே
உன்னுள்
தீபம் ஏற்றியது

வெள்ளையரின்
கறுப்பு மனத்தை
அந்த
வெளிச்சந் தான்
உனக்கு
வெளிப்படுத்தியது.

தேசத்திற்காக
நீ செய்த
முதல் தியாகம்
முப்பத்தேழு வயதில்
முழுத்துறவியானது

அகிம்சை எடுத்த
அவதாரம் நீ
அதனால் தான்
ஆங்கில
ஏகாதிபத்தியம்
உன் முன்
அற்பமானது

இந்தியா
உனது
இதயத்தில்
இருந்ததால் தான்
வீட்டிலேயே
குடும்பத்தை
விட்டுவிட்டாய் நீ.

சத்தியாக்கிரகம்
என்பதே
உனது
சத்தியவாழ்வின்
வெளிப்பாடுதான்.

அகிம்சையால்
ஒரு நாட்டின்
விடுதலையை
அடையலாம்
என்பதன்
அடையாளம் தான் நீ

அடக்கு முறை
உனது
ஆன்மீக பலத்தை
அடக்கியதா?
இல்லை......
இன்னும் அது
ஆறாகப் பெருக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசாதாரணமான
இந்த
ஆன்மீகப் பலமே
தீவிரவாதி
பாரதியைக் கூட
உன் பக்கம்
திரும்பச் செய்தது.

தீண்டாமை
இந்திய தேசத்தின்
தீராத வியாதி.

வியாதியைத்
தீர்க்கப் புறப்பட்ட
வித்தியாசமான
மருத்துவன் நீ!

மனிதர்கள்
இறைவனின்
மக்கள்
ஹரிஜன் என்ற
வார்த்தை
இதைத் தானே
காட்டுகிறது.

கிராம ராஜ்ஜியமே
உனது
இராமராஜ்ஜியம்
மக்களெல்லாம்
இராமனின்
மறுபதிப்புக்கள்

பல்லுப் போனாலும்
உரிமைக்காக
மல்லுக்கு நின்ற
மறவன் நீ!

மதத்தை நம்பிய
நீயும்
மார்க்சை நம்பிய
நேருவும்

இறுதிவரை
ஒன்றாக இருந்தமை
உலக அதிசயங்களில்
ஒன்று.

வலப்பக்கம்
ராஜாஜியையும்
இடப்பக்கம்
நேருவையும்
உன்னால் தான்
வைத்திருக்க முடிந்தது.

சபர்மதி
ஆச்சிரமத்தின்
சந்நியாசி நீ!

ஆச்சிரமத்தில்
வாழ்ந்த
ஒரேயொரு
அரசியல் தலைவன்
உலகத்தில் நீதான்.

சந்நியாசியாகிய
உன்னால்தான்
பிரிட்டிஸ் சாம்ராஜ்ஜியம்
சரிந்தது.

வன்முறை
உனது வழியல்ல
சுபாஸ் சந்திரபோஸ்
அதைச்
சுவீகரித்துக்
கொண்டாலும்
உனக்கு அது
சுடு நெருப்பே

பகவத் சிங்கும்
வாஞ்சி நாதனும்
பற்றி எரிந்த
அந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரமான
நெருப்பே!

புத்தரின்
அகிம்சையும்
யேசுவின்
கருணையும்
உன்னிடமே
புதுப் பிறவி எடுத்தன.

சத்திய சோதனையே
உனது சரித்திரம்.

பகவத் கீதையே
உனது
பரிசுத்த வேதம்.

அரசியலில்
ஆன்மிகம்
உனது
அதிசயக் கலவை.

சிறைச்சாலை
உனக்குத்
தவச்சாலை.

ஆங்கிலேயர் கண்ணில்
நீ
அரை நிர்வாணிதான்
ஆனால்
உன் ஆன்மீக பலத்தின்முன்
அவர்கள்
அரைக்காசுகள்.

இங்கிலாந்து சென்ற போதும்
நீ இந்தியனே
ஓர்
அங்குலம் கூட
அசையவில்லை.
பதவி ஆசை
உன்னைப்
பற்றியதேயில்லை.

பரதன் தெருவுக்குப்
பட்டம் சூட்டி விட்டு
நவகாளிக்கு
நடந்து சென்ற
அயோத்திராமன் நீ!

தீவிரவாதி
திலகரும்
நீயும்
வெவ்வேறு
திசையே
ஆயினும்

ஈர்ப்பு
உங்கள்
இருவரிடையேயும்
இருந்தது.

கோகலேயே
உனது
அரசியல் குரு.

குருவே
வியக்குமளவிற்கு
பல கோடிச்சீடர்களைக்
கொண்டவன் நீ.

துப்பாக்கிக் குண்டுகள்
உன்னைத்
துளைத்தபோது
அன்பும் அகிம்சையும்
அநாதைகளாயின.

கோட்சேயா
உனக்குக்
குறிவைத்தவன்?

இல்லை
பயங்கரவாதம்
அது
இந்தியா செய்த
பாவம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் கிரீடம்

கிரிக்கட் வெற்றி
இலங்கை சூடிய
தங்கக் கிரீடம்

சின்னஞ் சிறிய
தேசத்தின்
பென்னம் பெரிய
வெற்றி இது

உலகிலேயே இன்று
உயரப் பறக்கும்
தேசியக் கொடி
எங்கள்
தேசத்தினுடையது தான்

ஆடி அடங்கியது
அவுஸ்திரேலியா
ஓடி அடித்த
இலங்கையின் உற்சாகத்நால்

இங்கிலாந்தோ
அவுஸ்திரேலியாவோ
எங்களிடம் இனி
எடுபடா.

அரவிந்த டி சில்வாவின்
வித்தையால் தான்
உலக வின்ஸ் கிண்ணம்
எங்களிடம்
ஓடி வந்தது

கடாபி அரங்கில்
கேட்ட கை ஒலி
விடாத மழையையும்
வென்றது

மார்க் ரெயிலரா
இல்லை
ரணதுங்காவா?

பாகிஸ்தானில்
உலகம்
பார்த்துவிட்டது

இந்தியாவுக்கும்
இது
எதிர்நீச்சலே

அதிரடி ஆட்டக்காரர்
அரவிந்த டி சில்வா
ஒரு புதிர்தான்

விளையாட்டில் நாங்கள்
வீரர்களே
சந்திரிகாவின் ஆட்சியில்
இது ஒரு சரித்திரம்

அடுத்த உலகக்
கிண்ணத்தையும்
எங்கள் கைகளே
எடுத்துக் கொள்ளும்
இதில் என்ன சந்தேகம்

இனப் பிரச்சனையால்
கீழே
இறங்கிய தேசம்
இந்த வெற்றியால்
மேலே
எழுந்து நிற்கிறது

ஒன்று பட்டால்
வானத்தையும்
ஒரு கை பார்க்கலாம்
பாடம் ஒன்று
படித்துக் கொண்டோம்

இலங்கை இன்று
இமயம் இதை
எண்ணி எண்ணி
மகிழ்வோம்
எழுந்தாடுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 70 இல் இருந்து...

| | |
|---|---|
| — கட்ட பொன் | — கவிதை |
| — பயணம் | — கவிதை |
| — துரோணர் சபதம் | — நாடகம் |
| — எண்ணத்தில் நீந்துகின்றேன் | — கவிதை |
| — தமிழ்ப்பாவை | — கவிதை |
| — பாலர் தமிழ்ப்பாட்டு | — கவிதை |
| — கடற்கரைப்பூக்கள் | — கவிதை |
| — இனிக்குந் தமிழ் | — இலக்கியக் கட்டுரை |
| — ஒரு பூ மலர்கின்றது | — நாடகம் |
| — Culture and Civilization. | — ஆங்கிலக் கட்டுரை. |
| — விபுலாநந்தம் | — கட்டுரை |
| — அருளாளர் அந்தோனியார் | — புதுக்கவிதை |
| — கிறிஸ்து தத்துவம் | — புதுக்கவிதை |
| — சின்னச் சின்னக் கதைகள் | — கதை |
| — சின்னச் சின்னப்பூக்கள் | — கவிதை |
| — ஆசிரியன் ஓர் அட்சயபாத்திரம் | — புதுக்கவிதை |
| — கிறிஸ்து காவியம் | — காவியம் |
| — சிறுகதை விமரிசனம் | — விமரிசனம் |
| — புதுக்கவிதைப்புத்தகம் | — புதுக்கவிதை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org